بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ

In the Name of Allāh, the Most Gracious, the Most Merciful

ஜும்ஆ உரை

பிரார்த்தனையின் உயர் சிறப்புகள்

கலீஃபத்துல்லாஹ் ஹஸ்ரத் முனீர் அஹ்மத் அஸீம்(அலை) அவர்களின் சிறப்புரை

Tamil Translation of Friday Sermon by Khalifatullah Hazrat Munir Ahmad Azim dated on:

13 ரபிய்யுல் ஆகிர் 1438

(13 ஜனவரி 2017)

வெளியீடு : அமீர் ஜமாத்,

TNJUSAI பத்திரிகை குழுமம்,

தமிழ்நாடு. செல் : 917502272774

E.Mail : Jusai.tn@gmail.com

بِسْمِ اللَّهِ الرَّحْمَنِ الرَّحِيمِ

உலகெங்கிலும் உள்ள தனது அனைத்து ஸஹாபாக்கள் புதிய சஹாபாக்கள் மற்றும் அனைத்து முஸ்லீம்களுக்கும் தனது ஸலாத்தினை தெரிவித்த பிறகு., ஹஸ்ரத் முஹையுத்தீன் அல் கலீபத்துல்லாஹ் (அலை) அவர்கள்; தஷ்ஹத் தஅவ்வுது மற்றும் சூரா ஃபாத்திஹா ஒதி 'பிரார்த்தனையின் உயர் சிறப்புகள்' என்ற தலைப்பில் ஜும்ஆ பேருரையை வழங்கினார்கள்:
வகுர் ரப்பி அத் ஹில்நீ முத்கல சித்கின் வ அக்ரிஜ்நீ முஹ்ரஜ சித்கின் வஜ்அல்லீ மில் லதுன்க சுல்தானான் நஸீறா

நீர் கூறுவீராக: என் இறைவா! என்னை (மீண்டும் மக்காவிற்குள்) நல்ல முறையில் நுழையச் செய்வாயாக! நற்பெயரை விட்டு செல்லும் முறையில் (மக்காவிலிருந்து)என்னை வெளியேறச் செய்வாயாக! மேலும் உன்னிடமிருந்து எனக்கு உதவியாளராகவும் சாட்சியாகவும் விளங்கும் ஒருவரை நியமிப்பாயாக! (அல் இஸ்றா17:81)

இந்த துஆ முஹம்மத் நபி(ஸல்) அவர்களுக்கு, அவர்கள் மக்காவிலிருந்து மதீனா விற்கு(ஹிஜ்ரத்) இடம் பெயர்வதற்கு முன்னர் (வஹீ) அறிவிக்கப்பட்டது. அ(ந்)த(இறை வெளிப்பட்டி)ற்குள் அவர்களது இறுதியான திரும்புதல் மற்றும் அவர்களது நாடு துறந்து செல்லுதல் பற்றிய ஒரு முன்னறிவிப்பும் (அடங்கி) உள்ளது. இது மிகவும் பரந்த ஒரு விளக்கத்தையும் கொண்டுள்ளது.

நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மக்காவில் பதின்மூன்று ஆண்டுகளாக துன்புறுத்தப்பட்டார்கள். இந்த காரணத்தினாலேயே, அவர்கள் மதீனாவிற்கு இடம் பெயர்ந்தார்கள். அவர்கள் உண்மையுடன் புறப்பட்டு (மீண்டும்) உண்மை யுடனேயே திரும்பி வந்தார்கள். அவர்களது புறப்படுதலுக்கு முன்பாகவே அவர்களது திரும்புதல் குறித்து ஏன் குறிப்பிடப்பட்டது என்ற கேள்வி எழுகிறது.? இறைவன் தனது ஞானத்தில் ஹஜ்ரத் நபி பெருமானார் (ஸல்) அவர்கள், மக்காவை விட்டு நிரந்தரமாக வெளியேற வேண்டியிருக்கும் (என்ற) எண்ணம் அவர்களை ஒரு நொடிப்பொழுது கூட பாதித்து விடுவதை விரும்பவில்லை. அவரது திரும்புதலை (பற்றி) முதலிலேயே குறிப்பிட ப்பட்டதற்குக் (காரணம்), அதை இன்னும் திட்டவட்டமாகவும் அவர்கள் திரும்பிவருவார்கள் என்று அவர்களுக்கு உறுதியளிப்பதற்காகவும் அதனால், வருத்தப்படுவதற்கும் கவலைப்படுவதற்கும் எந்த அவசியமும் இல்லை. (என்பதற்குமாகும்).

இந்த பிரார்த்தனை (துஆ) ஹஜ்ரத் நபி (ஸல்) அவர்கள் மக்காவிலிருந்து வெளியேற வேண்டிய சூழ்நிலைகளை வெளிப்படுத்துகின்றது. அவர்களது எதிரிகள் அவர்களை ஒரு பொய்யர், புனைந்து கூறுபவர் மற்றும் ஒரு பொய்யான தீர்க்கதரிசி என்றெ ல்லாம் முத்திரை குத்தியிருந்தனர். மதீனாவில் அவர்கள் பெற்ற வரவேற்பு அவர் களது உண்மைக்கு சாட்சியம் அளிக்கின்றது. மதீனாவோடு தொடர்புடைய (இவ்) வசனம் மக்கள் அவர்களுடைய உண்மைக்கு சாட்சியம் அளிப்பார்கள் என்பதையும், அவர்கள் மீண்டும் வரும்போது மக்கா மக்களும் அவ்வாறே இருப் பார்கள் என்பதை யும் குறிப்பாக உணர்த்துகின்றது.

இது அவர்களுடைய பிரார்த்தனைகளின் விளைவும், இறைவனின் தனிப்பட்ட உதவியுமாகும். இந்த பிரார்த்தனையும் (துஆ) கூட அனைத்து பயணங்கள் சம்பந்தமாகவும் செய்யப்பட வேண்டும். குர்ஆனிய (துஆக்கள்) பிரார்த்தனை களானது (மிகப்)பரந்த பொருளைக் கொண்டுள்ளன. மேலும் பல்வேறு விஷயங்களுடனான தொடர்பிற்கேற்ப (அந்த துஆக்களை) செய்யலாம். திரு குர்ஆன்(கூறுகின்ற) ஒரு குறிப்பிட்ட நிகழ்வு அல்லது சூழ்நிலையோடு தொடர்புப்படுத்தும் எந்த துஆவாக இருந்தாலும்,(அதனை நாம் நமது) அன்றாட வாழ்க்கையில் அதிகமாக அல்லது குறைவாக நடைபெறுகின்ற (அதற்கு) ஒப்பான சூழ்நிலைகளின்போது (நாம்)பயன்படுத் தலாம். இதுவே ஹஜ்ரத் நபி(ஸல்) அவர்கள் மற்றும் அவர்களது தோழர்களது நடைமுறையாக இருந்தது.

இந்த பிரார்த்தனையின் மற்றொரு அம்சம் ஒரு நபரின் வாழ்க்கையில் தொடர்ந்து மாறி வரும் நிலைமைகளுடன் தொடர்புடையதாகும். இந்த மாற்றங்கள் தீயதிலிருந்து நல்லவவற்றிற்கோ அல்லது (அதற்கு) நேர்மாறாகவோ நடக்கமுடியும் மேலும் (இதற்கு முந்தைய வசனங்களில் கூட இறைவன் பிரார்த்தனையின் வழிகாட்டுதலை வெளிப் படுத்தியுள்ளான். இதன் மூலம் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள்(மிகப்) பெரிய ஆன்மீக உச்சத்திற்கு உயரக்கூடும் (என்பதை இவ்வாறு குறிப்பிடுகின்றான்)

"சூரியன் சாய்ந்ததில் இருந்து இரவில் நன்றாக இருட்டிவிடும் வரை தொழுகை யை மிகச் சிறந்த முறையில் நிறைவேற்றுவீராக! மேலும் அதிகாலை தொழுகை யையும் ஓதுவதையும் (நிறைவேற்றுவீராக).அதிகாலையில் தொழு வதும், ஓதுவதும் சாட்சிக் கூறத் தக்கதாக இருக்கின்றது.இன்னும் இரவில் (ஒரு சிறு) பகுதியில் தொழுது வருவீராக. (அது) உங்களுக்காக ஒரு உபரியான பிரார்த் தனை (அல்லது ஆன்மீக லாபமாகும்): விரைவில் உங்கள் இறைவன் உங்களை புகழும் மகிமையும் கொண்ட ஓர் இடத்திற்கு உயர்த்திவிடுவான்!"
(அல் இஸ்றா 17:79-80)

ஆன்மீக ரீதியில் உயர்ந்து பறக்க விரும்பும் அனைவரும் தொழுகையை முறையாகத் தொடர்ந்து பேண வேண்டும். அதன் பொருளை சரியாகப் புரிந்து கொள்ள வேண்டும், இல்லையெனில் பவுராவின் மகன் பல்ஆமின் விஷயத்தைப் போலவே, அவர் (தாமே) வழிதவறுவதற்கு பொறுப்பாகிவிடுவார்.

பல்ஆம் ஒரு நேர்வழி பெற்ற மனிதராக இருந்தார். பிறகு அவர் உலக ஆசைகளுக்கு கவரப்பட்டு இறை அச்சத்திலிருந்து விலகி பின்னர் இழிவுக்கு ஆளானார். நாம் எம்முடைய இறை வெளிப்பாடுகளை (அடையாளங்களை) வழங்கிய ஒரு வருடைய நிலையை நீர் அவர்களுக்கு எடுத்துரைப்பீராக! பின்னர் அவர் அவற்றிலிருந்து நழுவித் தனித்து விட்டார். இதனால் ஷைத்தான் அவரைப் பின்பற்றிச் சென்றான். ஆகவே அவர் வழிதவறியவர்களைச் சேர்ந்தவராகிவிட்டார். நாம் விரும்பியிருப்பின் அவற்றின் (அடையாளங்கள்) மூலம் நாம் அவரை உயர்த்தி இருப்போம். ஆனால் அவர் பூமியின் பக்கம் சாய்ந்து தமது சுய விருப்பங்களை பின்பற்றிச் சென்றுவிட்டார். எனவே அவருடைய நிலை ஒரு நாயின் நிலையைப் போன்றது ;அதனை நீர் தாக்கினாலும் அது நாக்கை தொங்கவிட்டுக் கொண்டிருக்கும், நீர் அதனை விட்டு விட்டாலும் அது நாக்கை தொங்க விட்டுக் கொண்டிருக்கும். இதுவே

எம்முடைய இறை வெளிப்பாடுகளை (அடையாளங்களை) பொய்ப்படுத்தும் சமுதாயத்தினரின் நிலையாகும். எனவே அவர்கள் சிந்திக்கும் பொருட்டு (இத்தகைய) வரலாறுகளை எடுத்துக் கூறுவீராக. (அல் அஃரா ஃப் 7:176-177)

பெரும்பாலும் ஒரு நபர் உலகின் பார்வையில் அங்கீகாரம் பெறுவதற்காக சுயநல நோக்கங்களின் அடிப்படையில் ஆன்மீக உயர் தரத்தையடைய விரும்புகின்றார். அவர்களுக்கு ஆன்மீக அனுபவத்தைப் போன்ற அனுபவங்கள் இருக்கலாம்; அதனை அவர்கள் இறைவனிடமிருந்து வந்துள்ளதாகவும் நினைக்கலாம். ஆனால் அவை ஷைத்தானிடமிருந்து வந்ததாகும்.

நான் எனது அனைத்து சஹாபாக்கள், உண்மையைத் தேடுபவர்கள், முஸ்லிம்கள் மற்றும் அனைத்து மனித இனத்திற்கும் வலியுறுத்துவது என்னவென்றால், (நீங்கள்) நேர்மையான பாதையில் தொடர்ந்து முன்னேறிச் சென்று இறைவனிடமிருந்து உதவியைத் தேடிக்கொள்ளுங்கள். முழுமையானதும், விரிவானதுமான பிரார்த்தனையானது, பல்வேறு நிலைமைகள் மற்றும் சூழ்நிலைகள் தொடர்பான ஆழமான அர்த்தங்களைக் கொண்டுள்ளது. அது ஆன்மீக மற்றும் பௌதீக பயணங்களை உள்ளடக்கியது.

ஒருவர் சோதனைகள் மற்றும் துன்பங்களின்போது, நம்பிக்கையை ஒருபோதும் இழந்துவிடக்கூடாது. ஒருவர் இறைவனிடத்தில் தன்னை பொறுமையுடன் அர்ப்பணித்துக் கொண்டால், அவன் ஒருவரது துயரத்தை அகற்றி அதற்குப் பதிலாக அவனது மகிழ்ச்சியின் வெகுமதியால் (அவரை) ஈடுசெய்வான். அல்லாஹ் உங்களை முன்னோடிகளாகவும், அவனது அன்பைப் பெறக்கூடியவர்களைச் சார்ந்தவர்களாகவும் ஆக்கி விடுவானாக! மகிழ்ச்சி மற்றும் துக்கமான சமயமாக இருப்பினும் எப்போதுமே உங்கள் விருப்பத்தை அல்லாஹ்விடம் ஒப்படைத்து விடுங்கள்; (அவ்வாறாயின்) நீங்கள் ஒருபோதும் தோல்வி அடைந்தவராக இருக்க மாட்டீர்கள். அல்லாஹ்வின் மகிழ்ச்சிக்காக நீங்கள் உலகில் வெளிப்படையாக “இழக்கின்ற" அனைத்தும்,(அதாவது) இப்போதைக்கு அல்லாஹ் உங்களிடமிருந்து மறைத்து வைத்திருக்கும் நித்திய வெகுமதி அசாதாரண மதிப்பையும், சுவையையும் கொண்டதாக இருக்கும்.

இன்ஷா அல்லாஹ்!! ஆமீன்!!!

கலீஃபத்துல்லாஹ் ஹஸ்ரத் முனீர் அஹ்மது அஸீம் (அலை) அவர்கள்

ஒருவர் சோதனைகள் மற்றும் துன்பங்களின்போது, நம்பிக்கையை ஒருபோதும் இழந்துவிடக்கூடாது. ஒருவர் இறைவனிடத்தில் தன்னை பொறுமையுடன் அர்ப்பணித்துக் கொண்டால், அவன் ஒருவரது துயரத்தை அகற்றி அதற்குப் பதிலாக அவனது மகிழ்ச்சியின் வெகுமதியால் (அவரை) ஈடுசெய்வான். அல்லாஹ் உங்களை முன்னோடிகளாகவும், அவனது அன்பைப் பெறக்கூடியவர்களைச் சார்ந்தவர் களாகவும் ஆக்கி விடுவானாக! மகிழ்ச்சி மற்றும் துக்கமான சமயமாக இருப்பினும் எப்போதுமே உங்கள் விருப்பத்தை அல்லாஹ்விடம் ஒப்படைத்து விடுங்கள்; (அவ்வாறாயின்) நீங்கள் ஒருபோதும் தோல்வி அடைந்தவராக இருக்க மாட்டீர்கள். அல்லாஹ்வின் மகிழ்ச்சிக்காக நீங்கள் உலகில் வெளிப்படையாக “இழக்கின்ற" அனைத்தும்,(அதாவது) இப்போதைக்கு அல்லாஹ் உங்களிடமிருந்து மறைத்து வைத்திருக்கும் நித்திய வெகுமதி அசாதாரண மதிப்பையும், சுவையையும் கொண்டதாக இருக்கும்